## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. புருஷோத்தமன் | அசல் வழக்கு எண். | 63/2020 |
| த/பெ. | - | கணேசன் | வா.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

04.02.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்தை பிரதிவாதிகளிடமிருந்து நான் வாங்கிவிட்டேன் தற்போது என்னிடம் சொத்து கேட்டு வருவதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் மீதுள்ள எனது உரிமையை பிரதிவாதிகள் மறுக்கின்றனர் என்றால் சரிதான். உரிமை விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எனக்கு கிரைய ஒப்பந்த ஆவணத்தின் படி பாத்தியம் என்பது தான் என்னுடைய தரப்பு வழக்கு என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் பதிவு செய்யப்படாத ஆவணங்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் கிரைய ஆவணமா அல்லது கிரைய ஒப்பந்த ஆவணமா என்றால் கிரைய ஒப்பந்த ஆவணம் தான், ஆனால் அதில் கிரையம் கொடுப்பதாக எழுதப்பட்டுள்ளது. கிரைய ஆவணத்திற்கும் கிரைய ஒப்பந்த ஆவணத்திற்கும் உள்ள வேறுபாடு எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்குரையில் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை கிரைய ஆவணங்கள் என்று தான் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தை நிறைவேற்ற வேண்டும் என்று இரண்டு மாதத்திற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்கள் எனக்கு கிரைய ஆவணத்தின் படி பாத்தியப்பட்டது என்று வழக்குரையில் சொல்லிவிட்டு இரண்டு மாதத்திற்கு முன்பு வா.சா.ஆ.2 ஆவணத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.02.04 17:40:19 +0530

3. ஒரு உடன்படிக்கை ஏற்பட்டதிலிருந்து எவ்வளவு காலத்திற்கு அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற சட்ட விதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.2 ஆவணம் 1982 ல் எழுதியதிலிருந்து தற்போது வரை அதனை நிறைவேற்ற நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல, என் அப்பா உயிருடன் இருந்தபோது பல முறை எழுதி தர சொல்லி என் அப்பா கேட்டார் அதன் பின்பு நானும் எழுதி தர சொல்லி பிரதிவாதிகளை கேட்டேன் ஆனால் பிரதிவாதிகள் எழுதி தரவில்லை. நானும் என் அப்பாவும் பிரதிவாதிகளை கிரைய செய்வதற்கு அழைத்தாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. வழக்கு சொத்திற்கான பட்டா என் பெயரில் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் ஆதியில் சாரங்கபாணி என்பவருக்கு உரிமையானது என்றால் சரிதான். சாரங்கபாணி என்பவருக்கு வழக்கு சொத்துக்கள் எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் சாரங்கபாணியின் தந்தையான ரங்கசாமி கவுண்டர் என்பவர் வெங்கடாசல முதலியார் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கிய வகையில் பாத்தியம். வழக்கு சொத்துக்கள் சாரங்கபாணிக்கு எப்படி கிடைத்தது என்றால் சாரங்கபாணியும் அவரது சகோதரர் செல்வராஜ் என்பவரும் வாய்மொழியாக பிரித்துக்கொண்டனர். எந்த வருடத்தில் வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் வாய்மொழி பாகம் ஏற்படவில்லை என்றும் ரங்கசாமியின் வாரிசுகள் கடந்த 29.01.2010 ல் தான் பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினை பத்திரம் மூலம் பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் சரியல்ல, அதற்கு முன்பாக பிரித்துக்கொண்டனர்.

5. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை பற்றி முன்னுக்கு பின் முரணாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் என்னால் ஜோடிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் இல்லை. பட்டா என் பெயரில் இல்லாததால் நான் தீர்வை செலுத்தவில்லை என்றால் சரியல்ல, தீர்வை செலுத்தியுள்ளேன். பட்டா எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.5 வரி இரசீதுகள் வழக்கு சொத்திற்கான இரசீதுகள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ,2 மற்றும் வா.சா.ஆ,4 ஆவணங்களை வைத்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

6. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை, வாய்மொழியாக கேட்டுள்ளேன். இந்த வழக்கு நான் தாக்கல் செய்வதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள்

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.02.04 17:40:26 +0530

என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றும் பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வழக்கு மூலத்திற்கு முரணாக புதியதாக ஒரு கட்சி எடுத்து பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல.

7. வழக்கு சொத்தானது திருவக்கரையிலிருந்து செங்கமேடு செல்லும் சாலை ஓரமாக உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் நல்ல மதிப்புடையது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை பொறுத்து நான் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தியிருந்தால் அதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும் வழக்கு சொத்தின் மதிப்பு அதிகமாக உள்ளதால் அதனை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களில் எவ்வளவு கிரைய தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்டதாக சொல்லிவிட்டு அது நிலுவையில் இருக்கும்போது எதற்காக வா.சா.ஆ.4 ஆவணம் எழுதப்பட்டது என்ற விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் தற்போது வரை பிரதிவாதிகள் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.
சாட்சி முடித்து வைக்கப்படுகிறது.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.02.04 17:40:31 +0530

District Munsif
Vanur.